DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 150/2024 |
| Deposition of Witness for | : | P.W. 14 |
| Name | : | **மருத்துவர்.கிஷோர்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 1வது எதிரி சிறையிலிருந்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார். எதிரி 2,3 ஆஜர் இல்லை. இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவரக பணியாற்றி வருகிறேன் கடந்த 26.01.2024 ம் தேதி நான் அதே மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்த போது காலை 8.37 மணியளவில் 30 வயது மதிக்கதக்க அரசி க.பெ. ஜாக்கப்பாரி, காளையார்கோவில் என்பவர் என்ற பெண்ணை அவரது உறவினரான அத்தை என்பரால் சிகிச்சைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வரப்பட்டார். நான் அவரை பரிசோதனை செய்த போது அவர் சுய நினைவுடன் இருந்தார். அவர் தன்னை

26.01.2024 ம் தேதி தனது வீட்டில் அடையாளம் தெரியாத நபரால் அருவாளால் தாக்கியதில் காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். உறவினர்களுக்கு காலை 6.00-6.30 மணியளவில் அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக சொன்னார்.

2. அவரை பரிசோதனை செய்த போது கீழ்கண்ட காயங்கள் இருந்தன 1. இடது பக்க காதுக்கு கீழே ஒரு வெட்டுக்காயம் (Laceration in Retro Auricular) 4x2x1 செ.மீ அளவில் காணப்பட்டது. 2. இடது பக்க தலையில் ஒரு வெட்டுக் காயம் ( Laceration in Left Parietal) 7x2x1 செ.மீ அளவிலும் அதே பகுதியில் மற்றொரு வெட்டுக்காயம் 10x2x1 செ.மீ அளவில் காணப்பட்டது. 3. வலது பக்க தலைப் பகுதியில் (Right Temporal) 9x2x1 செ.மீ அளவில் காணப்பட்டது. 4. வலது பக்க முன் தலைப்பகுதியில்(Right Frontal) 6x2x3 செ.மீ காணப்பட்டது. 5. வலது பக்க தலைப்பகுதியில் ஒரு வெட்டுக்காயம் (Right Parietal) 5x2x1 செ.மீ அளவில் காணப்பட்டது. 6. (Traumatic Amputation) இடது பக்க கை நடுவிரல் துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. அதே விரலில் ஒரு வெட்டுக்காயம் ( Laceration) 3x1x1 செ.மீ அளவில் இரத்தக் கசிவுடன் இருந்தது.

3. அவருக்கு நான் அவசர சிகிச்சை பிரிவில் முதல் உதவி செய்து அவரை மருத்து வார்டுக்கு அனுப்பி வைத்தேன். மருத்துவ வார்டில் அவரை பரிசோதனை செய்துவிட்டு மேல்சிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரை கம்பியால் ஒருபக்கம் கூர்மையாக உள்ளதால் தாக்கும் போது காயம் பட்டவருக்கு ஏற்பட்ட காயமானது ஏற்பட வாய்புள்ளது. அவருக்காக நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.9** ஆகும்.

4. அதே சம்பவத்தில் காயம் பட்ட மற்றொரு நபரான 12 வயது மதிக்கதக்க பெண் குழந்தை ஜர்லின் த.பெ ஜாக்கபாரி என்வர் அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் சிகிச்சை அவரது அத்தையால் 108 ஆம்புலஸ் மூலமாக அழைத்து வரப்பட்டார் அவரை பரிசோதனை செய்த போது கீழ்கண்ட காய்ங்கள் இருந்தன. 1. தலையின் பின் பகுதியில் ஒரு வெட்டுக்காயம் (Lacerated Occipital )

6x2x1 cm அளவில் காணப்பட்டது, 2) முதல் காயத்தின் அதே பகுதியில் இரண்டு வெட்டுக்காயங்கள் (Lacerated ) 4x2x1 cm, 3x2x1 cm அளவிலும் காணப்பட்டது. 3) வலது தலைப்பகுதியில் (Right Temporal Region) இரண்டு வெட்டுக்காயங்கள் 7x2x1 cm அளவிலும், மற்றொன்று 2x1x0.5 cm அளவிலும் காணப்பட்டது. 4) வலது கண் பகுதியில் ரத்தக்கட்டு (Periorbital Contusion with Ecchymosis) காணப்பட்டது.

5. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் உள்நோயாளியாக அனுமதித்து முதலுதவி செய்து மருத்துவ வார்டுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் வார்டு மருத்துவர் அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரை கம்பியால் ஒருபக்கம் கூர்மையாக உள்ளதால் தாக்கும் போது காயம் பட்டவருக்கு ஏற்பட்ட காயமானது ஏற்பட வாய்புள்ளது. அவருக்காக நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.10** ஆகும்.

6. அதே சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான 7 வயது ஆண்குழந்தை ஜோபின் த.பெ. ஜேக்கப்பாரி என்பவர் அவரது உறவினர் அத்தையால் சிகிச்சைக்கு அழைத்துவரப்பட்டார். அவரை பரிசோதித்து பார்த்த போது சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன. 1) வலது தலையில் வலது பகுதியில் இரண்டு வெட்டுக்காயங்கள்(Laceration over parietal Region) 4x 2x 1 cm, 6x2x1 cm அளவில் காணப்பட்டது. 2) வலது பகுதியில் மற்றொரு வெட்டுக்காயம் (Right Temporal parietal Region) 3x2x1 cm அளவில் காணப்பட்டது.

7. 3) வலது பக்க தலைப்பகுதியில் (Right Temporal Region) ஒருவெட்டுக்காயம் 5x2x1 cm அளவில் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் உள்நோயாளியாக அனுமதித்து முதலுதவி செய்து மருத்துவ வார்டுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் வார்டு மருத்துவர் அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரை கம்பியால் ஒருபக்கம் கூர்மையாக உள்ளதால் தாக்கும் போது காயம் பட்டவருக்கு ஏற்பட்ட

காயமானது ஏற்பட வாய்புள்ளது. அவருக்காக நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.11** ஆகும்.

7. அதே சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான சுமார் 70 வயது மதிக்கத்தக்க உபகாரமேரி க.பெ.சின்னப்பன் என்பவர் காளையார்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிசிச்சைக்காக எங்களது மருத்துவமனைக்கு அன்றைய தினமான 26.01.2024 காலை 10.01 மணியளவில் சிகிச்சைக்காக அவரது உறவினர் மூலம் 108 ஆம்புலன்சு மூலமாக அழைத்து வரப்பட்டார். காளையார்கோவில் விபத்து பதிவேட்டு எண்.110853 ன் படி அவர்தனக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். மேலும் நான் அவரை விசாரணை செய்தபோது 26.01.2024 ம் தேதியன்று அடையாளம் தெரியாது நபரால் அவரது வீட்டில் அருவாளால் தாக்கியதில் காயம்பட்டதாக தெரிவித்தார்.

8. 1) அவருக்கு இடது தலைப்பகுதியில் ஒரு வெட்டுக்காயம்(Left parietal Region) 6x3x3 cm அளவில் காணப்பட்டது. 2) இடது காதுக்கு பின்னால் ஒரு வெட்டுக்காயம் ( Laceration behind the Left Ear) 7x2x2 cm அளவில் காணப்பட்டது. 3) தலையின் பின்பகுதியில் ஒரு வெட்டுக்காயம் (Occipital Region) 12x3x3 cm அளவில் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் உள்நோயாளியாக அனுமதித்து முதலுதவி செய்து மருத்துவ வார்டுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் வார்டு மருத்துவர் அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரை கம்பியால் ஒருபக்கம் கூர்மையாக உள்ளதால் தாக்கும் போது காயம் பட்டவருக்கு ஏற்பட்ட காயமானது ஏற்பட வாய்புள்ளது. அவருக்காக நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.12** ஆகும்.

9. அதே சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு நபரான சுமார் 70 வயது மதிக்கத்தக்க சின்னப்பன் த.பெ.சபரிமுத்து என்பவர் காளையார்கோவில் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிசிச்சைக்காக எங்களது மருத்துவமனைக்கு அன்றைய தினமான 26.01.2024 காலை 09.45 மணியளவில் சிகிச்சைக்காக அவரது

உறவினர் மூலம் 108 ஆம்புலன்சு மூலமாக அழைத்து வரப்பட்டார். காளையார்கோவில் விபத்து பதிவேட்டு எண்.110354-ன் படி அவர் தனக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்தார். மேலும் நான் அவரை விசாரணை செய்தபோது 26.01.2024 ம் தேதியன்று அடையாளம் தெரியாது நபரால் அவரது வீட்டில் அருவாளால் தாக்கியதில் காயம்பட்டதாக தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

10. 1) இடது கண்பகுதியில் ஒரு வெட்டுக்காயம் (Laceration over left Supra Orbital) 6x2x1 cm அளவில் காணப்பட்டது. 2) வலது கண்பகுதியில் ஒரு வெட்டுக்காயம் ( (Laceration over Right Supra Orbital) 3x2x0.5 cm அளவில் காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக நான் உள்நோயாளியாக அனுமதித்து முதலுதவி செய்து மருத்துவ வார்டுக்கு அனுப்பி வைத்தேன். மேலும் வார்டு மருத்துவர் அவரை மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரை கம்பியால் ஒருபக்கம் கூர்மையாக உள்ளதால் தாக்கும் போது காயம் பட்டவருக்கு ஏற்பட்ட காயமானது ஏற்பட வாய்புள்ளது. அவருக்காக நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.13** ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் சாட்சியம் அளித்த காயம்பட்டவர்களுக்காக வழங்கிய மருத்துவ ஆவணங்களில் அசல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். அனைத்து காயம்பட்ட நபர்களும் வெவ்வேறான காலகட்டத்திலும் சிகிச்சைக்கு வந்தார்களா என்றால் முதலில் காயம்பட்டதாக சொல்லப்படும் மூன்று நபர்களும் ஒரே காலகட்டத்தில் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றும் அதன்பின்னீடு காயம்பட்டதாக சொல்லப்படும் இரண்டுநபர்கள் வெவ்வேறு காலகட்டத்தில் சிகிச்சைக்கு வந்தார்கள் என்றால் சரிதான்.

2. போலிசார் விசாரணையின் போது மேற்படி காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயங்களின் அளவீடுகள் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அருவாளால் காயம்பட்டதாக என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபர் யார் என்றால் ஜெர்லின் எனும் குழந்தை ஆவார். மேற்படி ஜெர்லின் தனக்கு அடையாளம் தெரியாத நபரால் தாக்கப்பட்டதாக கூறியிருக்கிறார் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது ஆயுதங்களை காண்பித்து விசாரித்தாரா என்றால் இல்லை. அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரையால் தாக்கினால் குத்துக்காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி காயம்பட்டு சிகிச்சைக்கு வந்த நபர்கள் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு ஆயுதங்களால் தாக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றால் சரிதான் ஆனால் காயம்பட்டவர்கள் அவ்வாறு என்னிடம் சொல்லவில்லை. காயம்பட்டதாக சொல்லப்படும் அனைத்து நபர்களையும் மேல்சிகிச்சைக்கு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு நான் பரிந்துரைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி காயம்பட்ட நபர்களை யார் மேல்சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு யார் பரிந்துரைத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரையால் வெட்டுக்காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் வாய்ப்புண்டு. நான் வழங்கிய காயச்சான்றிதழில் காயத்தின் அளவானது 7 செ.மீ மேல் எத்தனை காயங்கள் உள்ளது என்றால் 4 காயங்கள் உள்ளது.

4. அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரையில் கூர்மையான பகுதியானது 2 செ.மீ இருக்கும் என்றால் சுமார் 4 செ.மீ இருக்கும். நான் வழங்கிய காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள 7 செ.மீ அளவுள்ள காயங்கள் மற்றும் அதற்கு மேல் அளவுள்ள காயங்கள் இந்த அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரையால் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, வாய்ப்புள்ளது. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது அ.த.பொ.சா.3 இரும்பு கடப்பாரை காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.17 14:36:34 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**